Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 39 | thalaivaasaltv@gmail.com | திங்கட்கிழமை | நவம்பர் 09, 2020



## மூன்றாம் தவணைக்காக பாடசாலைகள் நவம்பர் 23 இல் திறக்கப்படும்

மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் நவம்பர் 23ஆம் திகதி மீளத் திறக்கப்படும் என்று கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இன்று தெரிவித்தார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். 03



## தமிழர் பிரச்சினையை கையாள துறைசார் நிபுணர் குழு

### த.தே. கூட்டமைப்புக்கு இந்தியா ஆலோசனை

தமிழ் மக்களின் பிரச்னைகளை விடயங்கள் சார்ந்து ஒன்றன் பின் ஒன்றாகக் கையாள துறைசார் நிபுணர் குழுவை நியமிக்குமாறு இந்திய இராஜதந்திர தரப்புக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் வலியுறுத்தியுள்ளதாகத் தெரியவருகின்றது. 03

## கொரோனா கொத்தணி வலயமாகும் சிறைச்சாலைகள்

இலங்கையில் கொரோனா தொற்று பரவல் 3வது அலை தாக்கம் அதிரித்து வரும் நிலையில் சிறைச்சாலைகள் புதிய கொத்தணியாக மாறிவருவது பெரும் சவாலாக மாறியுள்ளது.

இதுவரை வெலிக்கடை, போகம்பர மற்றும் மாத்தற சிறைகளில் இதுவரை 107 கைதிகள் உள்ளிட்ட 109 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சிறை நிர்வாகம், புனர்வாழ்வு மற்றும் திறன் மேம்பாட்டு ஆணையர் சந்தனா 03

## கோட்டா-ஜின்பிங் இரகசிய பேச்சு

### சீனத் தூதரகம் மறுப்பு

சீன ஜனாதிபதி சின் ஜின்பிங்குடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச இணைய மூலமான பேச்சில் ஈடுபட்டார் என்று வெளியாகிய செய்திகளை சீன அரசு அடியோடு நிராகரித்துள்ளது.

இருவருக்கிடையிலான பேச்சு குறித்து கொழும்பிலிருந்து வெளிவரும் வாராந்த பத்திரிகையொன்று நேற்று செய்தியை வெளியிட்டிருந்தது.

எனினும், அப்படியொரு விசேடமான பேச்சு இடம்பெறவில்லை என்று கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் அதன் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் இன்று தெரிவித்துள்ளது.

கடந்த 04ஆம் திகதி ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மற்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதிகளுக்கு இடையிலான இணைய வாயிலான பேச்சு இடம்பெற்றதை விடுத்து இரு நாட்டு அரச தலைவர்களுக்கும் இடையே எந்தவித பேச்சும் இடம் பெறவில்லை என்றும் தூதரகம் விளக்கமளித்துள்ளது.

## கொரோனோ சுகாதார விதிகள், சட்டங்களை உதாசீனம் செய்யும் அரசியல்வாதிகள்!

வடக்கில் அதிகாரத்தில் உள்ளவர்களும் அரசியல்வாதிகளும் சுகாதார விதிமுறைகளையும் தனிமைப்படுத்தல் சட்டங்களையும் தொடர்ந்து புறக்கணித்து வருவதனால் பொதுமக்கள் அது தொடர்பில் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் தற்போது காணப்படும் கொரோனோ தொற்று அபாயத்தில் இருந்து மக்களை பாதுகாக்க அரசாங்கம் சுகாதார விதிமுறைகளையும் தனிமைப்படுத்த சட்டத்தினையும் கடுமையாக நடைமுறைப் படுத்தி வருகின்றது.

கட்டாயம் முக கவசம் அணிய வேண்டும், சமூக இடைவெளி பேணப்பட வேண்டும் என, ஆனாலும் யாழ்ப்பாணத்தில் இவற்றை பொதுமக்கள் மீது கடுமையாக பிரயோகிக்கும் பொலிஸ், இராணுவம் மற்றும் சுகாதார பிரிவு அதிகாரிகள், அரசியல் வாதிகள் தொடர்பில் கணக்கில் எடுக்காமல் செயற்படுவது குறித்து மக்கள் கடும் அதிருப்தி வெளியிட்டு வருகின்றனர்.



யாழ்.மாவட்ட செயலகத்தில் கடந்த வெள்ளி மற்றும் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கூட்டங்களில் கொழும்பில் இருந்து வந்த அரசியல் வாதிகள், அதிகாரிகள் 03

## களுத்துறையில் 663 பேருக்கு கொரோனா

களுத்துறையில் பொதுசுகாதாரப் பரிசோதகப் பிரிவுகளுக்குட்பட்ட 15 பிரதேசங்களில் 663 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இன்று (09) இனங் காணப்பட்டுள்ளனர்.

இதில் மூன்று கர்ப்பிணிப் பெண்களும், பல்வேறு நோய்களைக் கொண்ட 6 பேரும் இருப்பதாக களுத்துறை மாவட்டத்தின் சுகாதார சேவைகள் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் 03

## நாட்டை முடக்காது கொரோனாவை ஒழிக்க முடியும்!




எமது நாட்டின் சுகாதாரத் துறையினால் மிக இலகுவாக கொவிட் நோய்த்தொற்றை ஒழிக்க முடியும். இதற்கு மக்களின் ஒத்துழைப்பு தேவை என ஜனாதிபதி கோட்டாபய 03

**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

# யாழ்ப்பாணத்தில் ஐம்பொன் சிலைகள் மீட்பு

யாழ்ப்பாணம்- வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கானை, ஓடக்கரை நாகதம்பிரான் ஆலயத்துக்கு அண்மையாக உள்ள குளத்துக்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஐம்பொன் சிலைகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த விடயம் தொடர்பாக இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணியளவில் அந்த இடத்துக்கு சென்ற அவர்கள், குளத்துக்குள்ளிலிருந்து சிலைகளை மீட்டெடுத்துள்ளனர்.



அதாவது, சுமார் 68 வருடங்களுக்கு முற்பட்ட முருகன், 3 மயில்கள், கலசம் ஆகிய ஐம்பொன் சிலைகளே இவ்வாறு மீட்கப்பட்டன.

அந்தக் காலப்பகுதியில் தங்கம் அதிகளவு சேர்க்கப்படுவதால் அவற்றின் தற்போதைய பெறுமதி ஒன்றரைக் கோடி ரூபாய் வரும் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

நீண்டகாலத்துக்கு முன்பு அவை புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. மேலும், மீட்கப்பட்ட சிலைகள் வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

# கிளிநொச்சியில் இரு பகுதிகள் முடக்கம்




கிளிநொச்சி மாவட்டத்தின் ஜெயபுரம் வடக்கு, தெற்கு பிரதேசங்கள் முற்றாக முடக்கப்பட்டுள்ளன.

இந்தத் தகவலை பூநகரி பிரதேச செயலாளர் கிருஷ்ணேந்திரன் உறுதிப்படுத்தியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளி தனிமைப்படுத்தலை மீறி சுற்றித் திரிந்தமை, அம்பலமானமையை அடுத்தே இந்தப் பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் பணியாற்றும் ஜெயபுரத்தை சேர்ந்த குறித்த நபர், கடந்த 25ஆம் திகதி சொந்த இடத்திற்கு திரும்பியிருந்தார். அவரை சுயதனிமைப்படுத்துமாறு பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் அறிவுறுத்தியிருந்தனர்.

அத்துடன், அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனையும் நடத்தப்பட்டது. ஆய்வில் அவருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

ஆனால், அவரிடம் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் நடத்திய ஆய்வில் தனிமைப்படுத்தல் கட்டுப்பாடுகளை மீறி, அவர் ஜெயபுரத்தின் வடக்கு, தெற்கு பிரதேசங்களில் நடமாடியமை தெரியவந்தது.

இதனையடுத்து அந்தப் பிரதேசங்கள் முடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் இன்னும் சமூக தொற்று ஏற்படவில்லை

இலங்கையில் கொரோனா வைரஸ் சமூக தொற்றாக மாறவில்லை என சுகாதார அமைச்சு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இதுவரை கண்டறியப்பட்ட அனைத்து நோயாளிகளும் ஏற்கனவே உள்ள ஒரு கொத்தணியுடன் இணைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

அதிகாரிகள் எவ்வாறான கருத்துக்களை தெரிவித்து வந்தாலும் சமூக பரவல் நாட்டில் உள்ளது என்பதை எதிர்க்கட்சிகள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றன.

இருப்பினும், இந்த நேரத்தில் கண்டறியப்பட்ட அனைத்து நோயாளிகளும் மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொத்தணிகளுடன் இணைக்கப்பட்டுள்ளதாக விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர கூறினார்.

ஆரம்பத்தில் மினுவாங்கொட கொத்தணியில் இருந்து ஏராளமான நோயாளிகள் கண்டறியப்பட்டனர். ஆனால் இப்போது எண்ணிக்கையில் குறைவு காணப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.




முடக்க கட்டுப்பாடுகள் இல்லாதபோது பேலியகொட கொத்தணியுடன் தொடர்புடைய பெரும்பாலானோர் கண்டறியப்பட்டதால், அது ஏற்கனவே ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு பரவியிருப்பது கண்டறியப்பட்டது என்றும் இதன் விளைவாக நாடு முழுவதும் ஏராளமான நோயாளிகள் அடையாளம் காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

பெரும்பாலான நோயாளிகள் ஒரு கொத்தணியுடன் இணைக்கப்பட்டுள்ளதால் சமூக பரவல் இல்லை என குறிப்பிட்டுள்ள சுதத் சமரவீர, இருப்பினும், சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றத் தவறினால், சமூக தொற்று ஏற்படுவதற்கான ஆபத்து இருப்பதாகவும் அவர் எச்சரித்தார்.

# சமூக இடைவெளி கட்டாயம்

சமூக இடைவெளியைப் பின்பற்றுவது, முகக் கவசம் அணிவது போன்றவை தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் மட்டுமல்லாமல் நாடு முழுதும் கடைப்பிடிக்கப்படல் வேண்டும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

அத்துடன் அதனை மீறுவோரைக் கைது செய்ய நாடளாவிய ரீதியில் இன்று (திங்கட்கிழமை) முதல் சுற்றிவளைப்புக்களை முன்னெடுப்பதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் 15ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி, இந்த நடவடிக்கைகள் மிகக் கண்டிப்பாக பின்பற்றப்படும் எனவும் நாட்டில் எந்த பிரதேசத்தில் இருந்தாலும் ஒருவர் வீட்டை விட்டு வெளியேறும்போது, முகக்கவசம் மற்றும் சமூக இடைவெளி தொடர்பாக மிக அவதானத்துடன் செயற்படுமாறும் அவர் எச்சரித்தார்.

# உலகம் முழுவதிலும் உள்ள பெண்களுக்குப் பெருமை

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றுள்ள ஜோ பைடனுக்கும் துணை ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள கமலா ஹரிஸிற்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கமலா ஹரிஸின் வெற்றி தெற்காசியப் பெண்களுக்கும் உலகம் முழுவதிலும் உள்ள பெண்களுக்குப் பெருமை தருகிறது என அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், அமெரிக்க மக்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து இன்று வெளியிட்டுள்ள ருவிற்றர் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ள அவர், "மன்னர்கள் பைத்தியக்காரர்களாக மாறும்போது ஜனநாயகமும் அதன் செயற்பாடுகளுமே மக்களுக்கு இருக்கக் கூடிய ஒரே பாதுகாப்பாகும்.

ஜனநாயக நிறுவனங்கள் அவற்றின் சுதந்திரத்திற்கும் சட்டப்படியான அவற்றின் செயற்பாட்டிற்கும் வருகின்ற சகல அச்சுறுத்தல்களையும் கடுமையாக எதிர்த்து நின்று வெற்றிகொள்ள வேண்டும். அதை அமெரிக்கா நிரூபித்திருக்கிறது.



அமெரிக்க மக்களே, உங்களால் நாம் பெருமையடைகின்றோம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# இன, மத பேதமற்ற தலைவரை இலங்கை எப்போது தெரிவுசெய்யப் போகின்றது?

அமெரிக்காவின் உப ஜனாதிபதியாக கமலா ஹரிஸ் தெரிவு செய்யப்பட்டதைப் போன்று, இனம், மதம் ஆகியவற்றைப் புறந்தள்ளி திறமை, தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கை எப்போது ஒரு தலைவரைத் தெரிவுசெய்யப் போகின்றது என முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜோ பைடன் மற்றும் கமலா ஹரிஸிற்கு வாழ்த்துத் தெரிவித்து வெளியிட்டுள்ள ருவிற்றர் பதிவிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் 46ஆவது ஜனாதிபதியாக ஜோ பைடனும் துணை ஜனாதிபதியாக கமலா ஹரிஸும் தெரிவாகியுள்ளனர். இந்நிலையில் அவர்களுக்கு உலக அளவில் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், அவர்களுக்கு வாழ்த்துக்களை வெளிப்படுத்தும் விதமான மங்கள சமரவீர வெளியிட்டுள்ள ருவிற்றர் பதிவில்,



"நம்மைச் சார்ந்த பெண்ணொருவர் உலகிலேயே மிகவும் பலம்பொருந்திய பெண்ணாக மாறியுள்ளமை தெற்காசியாவைச் சேர்ந்த அனைவரும் பெருமிதம் கொள்ளத்தக்க விடயமாகும்.

இதனைப்போன்று இனம், மதம், சாதி போன்றவற்றை விடுத்து திறமை, தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கை எப்போது ஒரு தலைவரைத் தெரிவுசெய்யப் போகின்றது?" என குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனா அறிகுறிகள் தென்படாத
# தொற்றாளர்கள் மூலம் வைரஸ் பரவும் ஆபத்து

நோய் அறிகுறிகள் தென்படாத கொரோனா தொற்றுக்குள்ளானவரின் மூலம் வைரஸ் பரவும் ஆபத்து நிலை உயர் மட்டத்தில் காணப்படுவதாக தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில் அடையாளம் காணப்படும் நோயாளர்களுள் பெரும் எண்ணிக்கையானவர்களுக்கு நோய்க்கான அறிகுறிகள் தென்படுவதில்லை என்றும் இவர்களின் அறியாமை மற்றுமொருவருக்கு நோய் பரவுவதற்கு காரணமாக இருப்பதாகவும் தொற்று நோயியல் பிரிவின் விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

தொற்று நோயியல் பிரிவின் விசேட வைத்தியர் மேலும் தெரிவிக்கையில், தற்பொழுது இவ்வாறான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும், கொழும்பு மாநாகர சபை எல்லைக்குள் பெரும்பாலான பகுதிகளில் ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் பயணங்களை வரையறுத்து தொற்றை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

வீடுகளில் தனிமைப்படுத்தலுக்காக ஈடுப்படுத்தப்படும் நபர்களின் தனிமைப்படுத்தல் எவ்வாறு இடம்பெற வேண்டும் என்ற விடயம் தொடர்பிலும் விசேட வைத்தியர் தெளிவுப்படுத்தினார்.

வயதானோர் மற்றும் தொற்றா நோய் உள்ளவர்கள் வீடுகளிலேயே இருக்குமாறும், வீடுகளில் இருந்து ஒருவர் மாத்திரம் தமது தேவைகளுக்காக வெளியே செல்வது பொருத்தமானது என்றும் வைத்தியர் குறிப்பிட்டார்.

யாராவது நபர் வீட்டில் தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டால் அந்த வீட்டில் ஏனைய உறுப்பினர்களும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுவது முக்கியமான விடயமாகும் என்றும் கூறினார்.

இதேவேளை வீடுகளில் தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டிருக்கும் குடும்பங்கள் முன்னெடுக்கப்பட வேண்டிய சரியான சுகாதார நடைமுறை பற்றியும் அவர் தெளிவுப்படுத்தினார்.

# தீபாவளிக்கு வருவோர் வீடுகளில் தனிமை



கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில், இன்று (09), மற்றைய மாவட்டங்களில் இருந்து ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோட்டப் பகுதிகளுக்கு வருகை தருவேரை, சொந்த வீடுகளிலேயே தனிமைப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என, ஹட்டன் சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி விஜிதா அல்விஸ் தெரிவித்தார்.

ஹட்டனில் இருந்து கொழும்பு உள்ளிட்ட பல வெளிமாவட்டங்களுக்குச் சென்று, பலர் தொழில் புரிந்து வருகின்றனர் என்றும் இதில் பலர், இம்மாதம் 14ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள தீபாவளிப் பண்டிகைக்காக, தத்தமது வீடுகளுக்கு வருகை தருவர் என்றும், அவ்வாறு வருகை தருபவர்கள், வந்தவுடன், தத்தமது வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்படுவர் என்று அவர் தெரிவித்தார்.

இதற்காக, நேற்று (08), கினிகத்தேனை, தியகலா, பொகவந்தலாவ ஆகிய பகுதிகளில் சாலைத் தடைகள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் இதன்மூலம், சொந்த வீடுகளுக்கு வருவோர் இனங்காணப்பட்டு, சுய தனிமைப்படுத்தலுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சொந்த வீடுகளுக்கு வருபவர்களைத் தவிர, வேறு வெளிமாவட்டங்களைச் சேர்ந்த எவரும், சாலைத் தடைகளைத் தாண்டி அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் அவ்வாறு யார் வந்தாலும் அவர்கள திருப்பி அனுப்பி வைக்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## நாட்டை முடக்காது...

ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொவிட் நோய்த்தொற்று ஒரு சுகாதார பிரச்சனையாகும். அதிலிருந்து மக்களை பாதுகாத்து நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வது சுகாதார சேவையினதும் அரசாங்கத்தினதும் பொறுப்பாகும். உலகின் உயர்தரம் வாய்ந்த அறிவைக் கொண்டுள்ள எமது நாட்டின் வைத்தியர்களுக்கும் சுகாதாரத் துறையினருக்கும் அதனை செய்ய முடியும் என்று தான் உறுதியாக நம்புவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் தினமும் சந்திக்கும் கோவிட் ஒழிப்பு விசேட செயலணி இன்று கூடியபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

”நோய்த் தொற்றுக்கு மத்தியில் எமக்கு மேற்கொள்ள முடியுமான மாற்று வழிகள் 03 உள்ளன.

ஒன்று ஊரடங்கு சட்டத்தை பிறப்பித்து முழு நாட்டையும் முடக்குவது.

இரண்டாவது எதனையும் செய்யாதிருப்பது,

மூன்றாவது நோயை கட்டுப்படுத்தும் அதே நேரம் நாட்டை வழமை போன்று பேணிச் செல்வதாகும்.

நாம் மூன்றாவது மாற்றுவழியை தெரிவுசெய்திருக்கின்றோம்” என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

கோவிட் நோயாளிகளை இனம்கண்டு உரிய சிகிச்சையை வழங்கி முதற் கட்டத்திலேயே குணப்படுத்த மருத்துவர்களுக்கும் பணிக்குழாமினருக்கும் முடியுமாக உள்ளது. எனவே தீவிர சிகிச்சை சேவைகள் தேவையில்லை. நோய் பரவுவதை கட்டுப்படுத்துவதற்கும் தொற்றுக்குள்ளாவதை தவிர்ந்திருப்பதற்கும் மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதற்காக பின்பற்றப்பட வேண்டிய சுகாதார வழிகாட்டல்களை மருத்துவர்களின் ஊடாக மக்களிடம் கொண்டு செல்வது ஊடகத் துறையின் முக்கிய பொறுப்பும் கடமையுமாகும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

ஆரம்பத்தில் கொவிட் நோய்த்தொற்றை வெற்றிகரமாக கட்டுப்படுத்தியதன் பின்னர் ஊடகங்களும் மக்களும் அனைத்தையும் மறந்துவிட்டதும் பொறுப்பை தவறவிட்டதும் தற்போதைய நிலைமைக்கு காரணமாகும்.

நோய்த்தொற்று உலகிலிருந்து ஒழிக்கப்படும் வரை நாட்டை மூடி வைக்க முடியாது. யதார்த்தத்தை புரிந்துகொண்டு செயற்படவேண்டும். சுமார் 40 நாட்கள் மூடப்பட்டிருந்த பிரதேசங்களிலும் நாளாந்தம் தொற்றாளர்கள் பதிவாகின்றனர். இதிலிருந்து தெரியவருவது மூடிவைப்பதால் மட்டும் நோய்த்தொற்றை ஒழிக்க முடியாது என்பதாகும்” என்றும் ஜனாதிபதி அதெரிவித்தார்.

”இலகுவான விடயம் நாட்டை மூடி வைப்பதாகும். எனினும் மக்கள் வாழ வேண்டும். தொழில்கள், விவசாயம், மீன்பிடி உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு பொருளாதாரத்தை பாதுகாப்பது எனது பொறுப்பாகும்.

பீசீஆர் பரிசோதனைக்காக அரசாங்கம் நாளொன்றுக்கு 60மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் செலவிடுகின்றது. தனிமைப்படுத்தல் உள்ளிட்ட அனைத்து செயற்பாடுகளுக்கும் நாளாந்தம் பெருந்தொகை செலவிடப்படுகின்றது. மக்கள் இந்த நிலைமையை புரிந்துகொண்டு நோய்த்தொற்றுக்கு ஆளாவதிலிருந்து தவிர்ந்திருப்பது அவர்களது தனிப்பட்ட பொறுப்பும் கடமையுமாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே, ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க ஆகியோரும் கொவிட் விசேட செயலணி உறுப்பினர்களும் இந்த கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

## தமிழர் பிரச்சினையை...

தொல்பொருள், பண்பாட்டு, கலாசார ரீதியாக ஆக்கிரமிக்கப்படும் செயல்பாடுகள் அல்லது திட்டமிட்டு மாற்றியமைக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளுடனான பல்வேறு தொடர்பாடல்கள் மற்றும் சந்திப்புக்களின் போது இராஜதந்திர தரப்புக்களிடத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனையடுத்தே தமது தரப்புக்களுடன் இணைந்து செயல்பட கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளுக்கு அப்பால் துறைசார் குழு ஒன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்றும் இராஜதந்திர தரப்புக்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் விரைவில் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது என அறியமுடிகின்றது. இந்தக் குழு, மக்கள் பிரச்னைகளை முக்கியத்துவ அடிப்படையில் உரிய தரவுகளுடன் கிரமமாக ஆவணப்படுத்தவுள்ளது.

இதில் மாகாண சபை முறைமையிலுள்ள குறைபாடுகள் மற்றும் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தல், இனப்பிரச்னைக்கான தீர்வு உள்ளிட்ட முக்கிய விடயங்களும் இடம்பெறவுள்ளன.

இதனைத்தொடர்ந்து இராஜதந்திர தரப்புக்களின் மூலம் அவற்றை எவ்வாறு தீர்ப்பது என்பது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கைகள் முன்னெடுப்பதை இலக்காகக்கொண்டு இந்த நிபுணர் குழு செயல்படவுள்ளது.

எனினும், தற்போது வரையில் இந்த விடயம் தொடர்பில் கூட்டமைப்பினுள் பரஸ்பர கலந்துரையாடல்கள் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை என்றும் விரைவில் இவ்விடயம் சம்பந்தமாக கூட்டமைப்பு கூடிப் பேசவுள்ளது எனக் கூறப்படுகின்றது.

## கொரோனா கொத்தணி...

ஏகநாயக்க தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் கொரோனா தொற்று உறுதியான கைதிகளின் மொத்த எண்ணிக்கை 99 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் பெண் கைதிகள் 89 பேரும் ஆண் கைதிகள் 10 பேரும் உள்ளடங்குகின்றனர். இதுதவிர சிறை பாதுகாப்பு விவரங்களுக்கு நியமிக்கப்பட்ட காவல்துறை சிறப்பு பணி அதிகாரி ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது தவிர போகம்பர சிறைச்சாலையில் 7 கைதிகளுக்கும், கொழும்பு சிறைச்சாலையில் இருந்து மாத்தற சிறைக்கு மாற்றப்பட்டிருந்த கைதி ஒருவருக்கும் இதுவரை தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நவம்பர் 04ம் திகதி முதல் நவம்பர் 08ம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் இவ்வாறு 109 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

சிறைச்சாலைகளில் கொரோனா தொற்று உறுதியானவர்களது எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகின்றமையானது சிறைச்சாலைக் கொத்தணிகளை உருவாக்குமாக இருந்தால் மற்றொரு பேரவலமாக மாறக்கூடும் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனா சுகாதார...

கலந்து கொண்டமை தொடர்பில் மக்கள் கடும் விசனம் தெரிவித்து வந்ததுடன் , ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் கடுமையான விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன.

இந்நிலையில் , இன்றைய தினம் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கினை இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இன்றைய தினம் பார்வையிட்டார். அதன் போது யாழ்.மாநகர சபை முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட் முக கவசம் அணியாது அதனை கைகளில் சுற்றியவாறு சமூக இடைவெளியை பேணாது அருகில் நின்று உரையாடும் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு கண்டனங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

## மூன்றாம் தவணைக்காக...

பாடசாலைகள் இன்று மீள திறக்கப்படும் என கல்வி அமைச்சு ஏற்கனவே அறிவித்திருந்தது. எனினும், கொரோனாப் பரவலால் மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டே மேலும் இரு வாரங்களுக்கு விடுமுறையை நீடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் கல்வி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## களுத்துறையில்...

உதய ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஹொரன பிரதேசத்தில் மாத்திரம் 90 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளன ரெனவும், அகலவத்தயில் 19, பண்டாரகமயில் 63, புளத்சிங்களவில் 28, தொடங்கொடயில் 3, இங்கிரியவில் 75, களுத்துறையில் 52, மதுராவல 30, மதுகமவில் 66, மில்லினியவில் 28, பாலிந்தநுவரவில் 9, பாணந்துறையில் 62, வாத்துவவில் 47 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

# மேல் மாகாணத்தில் நீக்கப்பட்டது ஊரடங்கு



மேல் மாகாணம் உள்ளிட்ட பகுதிகளில் அமுலில் இருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் இன்று (திங்கட்கிழமை) அதிகாலை 5 மணியுடன் தளர்த்தப்பட்டுள்ளது.

எனினும் கொரோனா வைரஸ் தொற்று உறுதியானவர்கள் அடையாளம் காணப்படும் சில பகுதிகள் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய கொழும்பு மாவட்டத்தில் மட்டக்குளி, டேம் வீதி, முகத்துவாரம், புளுமெண்டல், கொட்டாஞ்சேனை, கிரான்ட்பாஸ், கரையோர பிரதேசம், ஆட்டுப்பட்டித்தெரு, மாளிகாவத்தை, தெமட்டகொடை, வெல்லம்பிட்டி, பொரளை மற்றும் வாழைத்தோட்டம் ஆகிய காவற்துறை அதிகார பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அதேநேரம், மட்டக்குளியின் மெத்சந்த செவன, மிஹிஜயசெவன, முகத்துவாரத்தின் ரண்மின செவன, தெமட்டகொடையின் சிறிசந்த உயன, மாளிகாவத்தையின் தேசிய வீடமைப்புத் திட்டம் போன்ற தொடர்மாடிகளில் இருந்து எவரும் வெளிச் செல்லவோஇ அல்லது உட்பிரவேசிப்பதற்கோ அனுமதியில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் வத்தளை, பேலியகொடை, கடவத்தை, ராகம, நீர்கொழும்பு, பமுனுகம, ஜா-எல,, சபுகஸ்கந்தை ஆகிய காவற்துறை அதிகார பிரதேசங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதுதவிர களுத்துறை மாவட்டத்தின் ஹொரணை, இங்கிரிய காவற்துறை அதிகார பிரதேசங்களிலும் வேகட - மேற்கு கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவ தளபதி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் குருநாகல் மாவட்டத்தில் - குருநாகல் மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகள் குளியாப்பிட்டி, மாவனெல்ல, ருவான்வெல்ல ஆகிய காவற்துறை அதிகார பிரதேசங்களும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளதாக இராணுவ தளபதி லெப்டினன் ஜென்ரல் சவேந்திர சில்வா சுட்டிக்காட்டினார்.

அத்துடன் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் வாழும் பொது மக்கள் தொழிலுக்காக அந்த பகுதிகளில் இருந்து வெளியில் செல்ல இன்று முதல் அனுமதிக்கப்படமாட்டார்கள் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் சுசி பெரேரா தெரிவித்துள்ளார்.

ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டதன் பின்னர் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளுக்குள் எவரும் உட்பிரவேசிக்கவோ, அல்லது வெளியேறவோ முழுமையாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதனை மீறினால் குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டனை வழங்க முடியும் என பொலஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண எச்சரித்துள்ளார்.

எனினும் தனிமைப்படுத்திய பகுதிகளுக்குள் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோர், முதலீட்டு சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஆகியனவற்றில் கடமையாற்றும் பணியாளர்களுக்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இரத்தினபுரியில் 100 பேருக்கு தொற்று

இரத்தினபுரி மாவட்டத்துக்குள் நேற்று (8) பகல் வரை கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 100 ஆக அதிகரித்துள்ளதென, இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலனி லொக்குபோத்தாகம தெரிவித்துள்ளார்.

அத்துடன், 5,316 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தொற்றாளர்கள் அனைவரும்பிரெண்டிக்ஸ்கொத்தணி, போட்லைன், பேலியாகொட, கஹதுட்டுவ, ஹைட்ராமணி, கொழும்பு துறைமுகம் மற்றும் வெளிநாட்டிலிருந்து வந்த தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்தவர்களென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## நேற்று 500இற்கு மேற்பட்டோருக்கு கொரோனா தொற்று!



நாட்டில் நேற்று மட்டும் 510 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தொற்று கண்டறியப்பட்ட அனைவரும் பேலியகொட கொரோனா கொத்தணியில் தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புடையவர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, மினுவாங்கொட மற்றும் பேலியகொட மீன் சந்தை கொரோனா கொத்தணியில் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை ஒன்பதாயிரத்தைக் கடந்து பத்தாயிரத்து 447ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 929ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து இன்று மட்டும் 562 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில் இதுவரை எட்டாயிரத்து 285 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இந்நிலையில், இன்னும் ஐயாயிரத்து 610 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

நாட்டில், கொரோனா வைரஸ் தொற்றினால் இதுவரை 35 பேர் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கஞ்சா வியாபாரம் தொடர்பில் செய்தி அறிக்கையிட்ட ஊடகவியலாளர் படுகொலை



தமிழகத்தில் இளம் ஊடகவியலாளர் ஒருவர் இனம் தெரியாத கும்பலால் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு வெட்டிப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தமிழன் தொலைகாட்சி செய்தியாளரான காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் தாலுகா சோமங்கலத்தை அடுத்த நல்லூர் கிராமத்தைச் சேர்ந்த இசுரவேல் மோசஸ் என்பவரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர், நேற்றிரவு வீட்டிலிருந்த வேளை வீட்டிற்கு வெளியே நின்று அழைத்த மர்ம நபர்கள் அவரை அரிவாளால் சரமாரியாக வெட்டிவிட்டு தப்பி சென்றுள்ளனர்.

படுகாயமடைந்தவரை வீட்டிலிருந்தோர் மீட்டு குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்த போதிலும் அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த வாரம் தமது பிரதேசத்தில் இடம்பெறும் கஞ்சா வியபாரம் தொடர்பிலும், அதனூடான சமூக அவலங்கள் தொடர்பிலும் செய்தி அறிக்கையிட்டிருந்தார். அதனால் அவருக்கு இனம் தெரியாத நபர்களால் தொலைபேசி ஊடாக மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளன. அது தொடர்பில் காவல் நிலையத்தில் முறைப்பாடும் செய்யபட்டது

முறைப்பாடு தொடர்பில் பொலிசார் விசாரணைகளை துரிதமாக முன்னெடுக்காது அசமந்தமாக செயற்பட்ட நிலையில் நேற்றிரவு ஊடகவியலாளர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என சக ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## மினுவங்கொட, பேலியகொட கொரோனா கொத்தணிகளில் 10 ஆயிரம் பேருக்கு தொற்று

மினுவங்கொட, பேலியகொட கொரோனா வைரஸ் கொத்தணியில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், மினுவங்கொட மற்றும் பேலியகொட கொரோனா கொத்தணியில் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 10 ஆயிரத்து 451 ஆக உள்ளது.

அதேவேளை, இலங்கையில் இதுவரையில் 13 ஆயிரத்து 929 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் மாத்திரம் 510 பேர் புதிதாக இனங்காணப்பட்டதை அடுத்து இந்த தொகை அதிகரித்துள்ளது.

அவர்களுள் ஆயிரத்து 41 பேர் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் மற்றும் ஆயிரத்து 7 பேர் பேர் மீன் சந்தை ஊழியர்கள் என்பதுடன் ஏனைய 8 ஆயிரத்து 403 பேர் அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் 8 ஆயிரத்து 285 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளதுடன், 5 ஆயிரத்து 609 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இதேவேளை, இலங்கையில் இதுவரையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி 35 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## அதிக விலையில் அரிசி விற்ற 50 பேர் கைது



புத்தளம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது, நிர்ணய விலைக்கு அதிக விலையில், அரிசி விற்பனையில் ஈடுபட்ட 50 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.